**சுருக்கம்**

சுற்றுலா – மாநில அரசு திட்டம் – சுற்றுலா சாலை மேம்பாடு – 2011–2012 ஆம் நிதியாண்டில் 10 மாவட்டங்களில் சுற்றுலா சாலை மேம்பாட்டு திட்டப்பணிகள் நெடுஞ்சாலைத்துறை மூலம் மேற்கொள்ளுதல் – ரூ.992.57 இலட்சம் – நிதி ஒப்பளிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

**சுற்றுலா மற்றும் பண்பாட்டு(சு3)த் துறை**

அரசாணை(நிலை) எண்.228 நாள்:01.12.2011
(திருவள்ளுவர் ஆண்டு 2042, கார்த்திகை–15)

**படிக்கப்பட்டது:**

1) மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்களின் 25.7.2011 நாளிட்ட கடிதம்.
2) மாவட்ட ஆட்சித் தலைவர், விருதுநகர் அவர்களின் கடித எண்.6722 /2009/கியூ2, நாள் 30.8.2011.
3) தலைமைப் பொறியாளர், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, நெடுஞ்சாலைத்துறை, அவர்களின் கடித எண்.8245/திட்டம்2/2011, நாள்:14.9.2011.
4) சுற்றுலா இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண்.3363/திவ3/2011, நாள்:14.11.2011.

---

**ஆணை:**

சுற்றுலா இயக்குநர், மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட தனது கடிதத்தில், சுற்றுலாத் தலங்களை இணைக்கும் ஊரக மற்றும் நகர்ப்புற சாலைகளை சுற்றுலா சாலை மேம்பாட்டு நிதியுதவித் திட்டத்தின் கீழ், நெடுஞ்சாலைத் துறையின் மூலம் மேம்பாடு செய்வதற்காக மாவட்ட ஆட்சியர் மற்றும் இதர துறைத் தலைவர்களிடமிருந்து உரிய கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடு பெற்று, இத்துறையின் பரிசீலனைக்குப் பின்னர் அரசுக்கு பரிந்துரை செய்து அதன் மீது அரசின் ஆணை மற்றும் நிதி ஒப்பளிப்பு பெறப்பட்டு உரிய துறைகள் மூலம் சுற்றுலா சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவித்துள்ளார்.

2. தூத்துக்குடி, விருதுநகர், திண்டுக்கல், கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், தருமபுரி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், கடலூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களிலுள்ள திருக்கோவில் மற்றும் சுற்றுலாப் பகுதிகளின் சாலை மேம்பாட்டிற்காக ரூ.10.00 கோடிக்கான திட்ட மதிப்பீடு, மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்களின் மூலம் நாகப்பட்டினம் மாவட்டம் சிக்கல் அருள்மிகு சிங்காரவேலர் ஆலயத்தை சுற்றியுள்ள 210 மீட்டர் நீளமுள்ள கிழக்கு ரதவீதியை சிமெண்ட் சாலையாக மேம்படுத்துவதற்காக ரூ.21.57 இலட்சத்திற்கான திட்ட மதிப்பீடு, விருதுநகர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர்கள் தலா ரூ.300.00 இலட்சத்திற்கு திட்ட மதிப்பீடு பெறப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு அதற்கான ஆணை மற்றும் நிதி ஒதுக்கீடு ஆகியவற்றை அரசிடமிருந்து பெற்றுத் தருமாறு நெடுஞ்சாலைத்துறையின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு

பிரிவுக்கான தலைமைப் பொறியாளரால் கோரப்பட்டுள்ளது என்றும் சுற்றுலா இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. தூத்துக்குடி, திண்டுக்கல், கோயம்புத்தூர், ஈரோடு, தருமபுரி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், கடலூர், காஞ்சிபுரம், விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் சுற்றுலாத் தலங்களும், கோவில்களும், புராதனச் சின்னங்களும் அதிகமாக உள்ளன என்றும், குறிப்பாக கோவைக் குற்றாலம், ஒகேனக்கல், சித்தன்னவாசல், குடுமியான்மலை, தஞ்சை பெரியகோவில், மாமல்லபுரம், சிக்கல் அருள்மிகு சிங்காரவேலர் ஆலயம் ஆகியவை மிகவும் புகழ்பெற்ற சுற்றுலாத் தலங்களாகும் என்றும் இவற்றைக் காண இங்கு வரும் சுற்றுலாப் பயணிகள், பக்தர்கள், உள்ளூர் மற்றும் வெளியூர் மக்கள் ஆகியவர்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக் கொண்டே இருப்பதால், மேற்குறிப்பிட்டுள்ள சாலைகளை மேம்படுத்துவது சுற்றுலாப் பயணிகள், பக்தர்கள், உள்ளூர் மற்றும் வெளியூர் மக்கள் ஆகியோருக்குப் பயனுள்ளதாகவும் அமையும் என்றும், நெடுஞ்சாலைத்துறையின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு தலைமைப் பொறியாளர், மாண்புமிகு மீனவளத்துறை அமைச்சர், விருதுநகர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆகியோர் தெரிவித்துள்ளதாகவும் சுற்றுலா இயக்குநர் குறிப்பிட்டுள்ளார்.

4. இக்கருத்துரு தொடர்பாக, 2011–2012ஆம் நிதியாண்டில் சுற்றுலா சாலை மேம்பாட்டுப்பணிகளை இறுதி செய்தல் மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்குவது குறித்த கலந்தாய்வுக் கூட்டம், சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறையின் முதன்மைச் செயலாளர் அவர்கள் தலைமையில் 18.11.2011 அன்று நடைபெற்றது. இக்கலந்தாய்வுக் கூட்டத்தில், 2011–2012 ஆம் நிதியாண்டில் சுற்றுலா சாலை மேம்பாட்டுப் பணிகளுக்காக திருத்திய வரவு செலவு திட்டத்தில் ரூ.10.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால், பின்வரும் கருத்துருக்களை ஏற்கலாம் என முடிவெடுக்கப்பட்டது:-

| வ. எண் | மாவட்டம் | பணிகளின் விபரம் | திட்ட மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) | திட்டத்தினை செயற்படுத்தும் முகமையின் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | தூத்துக்குடி | 1. தென்திருப்பேரை – ஏரல் சாலை (0/0–1/4 கி.மீ.) மேம்பாடு செய்தல் (இதர மாவட்ட சாலை) | 55.00 | கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, தூத்துக்குடி. |
| | | 2. ஆயத்துறை – மங்களக்குறிச்சி சாலை (கி.மீ 0/0–1/8) அகலப்படுத்தி மேம்படுத்துதல் (இதர மாவட்ட சாலை) | 150.00 | |
| | | 3. திருவைகுண்டம் பேருந்து நிறுத்தச் சாலை (கிமீ 0/0–0/2) அகலப்படுத்தி மேம்படுத்துதல் | 25.00 | |

| வ. எண் | மாவட்டம் | பணிகளின் விபரம் | திட்ட மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) | திட்டத்தினை செயற்படுத்தும் முகமையின் பெயர் |
|---|---|---|---|---|
| 2 | கோயம்புத்தூர் | மேட்டுப்பாளையம் – நெல்லித்துறை சாலை (1/6–4/0 கி.மீ) மேம்பாடு செய்தல் (இதர மாவட்ட சாலை) | 80.00 | கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, கோயம்புத்தூர் |
| 3 | ஈரோடு | பவானி அந்தியூர் கொள்ளேகால் சாலை – குருநாத சுவாமி கோவில் சாலை (0/0–1/6 கி.மீ) மேம்பாடு செய்தல் (இதர மாவட்ட சாலை) | 27.00 | கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, ஈரோடு |
| 4 | தருமபுரி | ஒக்கேனக்கல் – பென்னாகரம் – தருமபுரி – திருப்பத்தூர் (9/2–9/8 கி.மீ) சாலையில் தடுப்பு சுவர் அமைத்தல் (மாநில நெடுஞ்சாலை) | 25.00 | கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, தருமபுரி |
| 5 | தஞ்சாவூர் | கட்டயன்காடு–உக்கடை–கொல்லுக்காடு சாலை (11/0–13/6 கி.மீ) மேம்பாடு செய்தல் (இதர மாவட்ட சாலை) | 25.00 | கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, தஞ்சாவூர். |
| 6 | நாகப்பட்டினம் | 1. பெருமலை–தில்லையாடி–திருக்கடையூர் சாலை (3/4–6/0 கி.மீ) மேம்பாடு செய்தல் (இதர மாவட்ட சாலை) | 28.00 | கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, நாகப் பட்டினம் |

| வ. எண் | மாவட்டம் | பணிகளின் விபரம் | திட்ட மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) | திட்டத்தினை செயற்படுத்தும் முகமையின் பெயர் |
|---|---|---|---|---|
| | | 2. சிக்கல் அருள்மிகு சிங்காரவேலன் ஆலயத்தை சுற்றி கிழக்கு ரத வீதியை சிமெண்ட் சாலையாக மேம்பாடு செய்தல் (210 மீட்டர்) | 21.57 | |
| 7 | கடலூர் | சிதம்பரம்–பிச்சாவரம் சுற்றுலாச் சாலை (3/2–6/4 கி.மீ) மேம்பாடு செய்தல் (மாவட்ட முக்கிய சாலை) | 90.00 | கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, கடலூர் |
| 8 | காஞ்சிபுரம் | 1. மாமல்லபுரம் பேருந்து நிலையம் மற்றும் அர்ச்சுனன் தவம் பகுதியிலுள்ள பாடசாலை சாலை (0/0–0/110 கி.மீ) மேம்பாடு செய்தல் (இதர மாவட்ட சாலை) | 8.00 | கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை), கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, செங்கல்பட்டு |
| | | 2. திருக்கழுக் குன்றம் – மாமல்லபுரம் சாலை (6/6–9/0 கி.மீ) மேம்பாடு செய்தல்(மாநில நெடுஞ்சாலை) | 80.00 | |
| 9 | விருதுநகர் | அருள்மிகு திருவண்ணாமலை கோயில் (தென்திருப்பதி) கிரிவலப் பாதை (3 கி.மீ.) சாலை மேம்படுத்துதல் | 160.00 | கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) கட்டுமானம் மற்றும் பராமரிப்பு , விருதுநகர். |
| 10 | சிவகங்கை | 1.பிரான்மலை வார்பட்டு சாலை (கி.மீ 0/0–3/0) மேம்படுத்துதல் | 65.00 | கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) கட்டுமானம் மற்றும் |

| வ. எண் | மாவட்டம் | பணிகளின் விபரம் | திட்ட மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) | திட்டத்தினை செயற்படுத்தும் முகமையின் பெயர் |
|---|---|---|---|---|
| | | 2.பிரான்மலை வார்பட்டு சாலை (கி.மீ 3/0–6/2) மேம்படுத்துதல் | 70.00 | பராமரிப்பு , சிவகங்கை. |
| | | 3.மலைக்கொழுந்தீஸ் வரர் கோயில் சாலை (கி.மீ 0/0–3/0) மேம்படுத்துதல் | 23.00 | |
| | | 4. கந்ததேவி கோயில் சாலை (கி.மீ 0/0–0/850) மற்றும் தேவ கோட்டை ஏ.புதுார் சாலை (கி.மீ 3/3–3/7) மேம்படுத்துதல் | 60.00 | |
| | | மொத்தம் | 992.57 | |
| (ரூபாய் தொள்ளாயிரத்து தொண்ணூற்று இரண்டு இலட்சத்து ஐம்பத்து ஏழாயிரம் மட்டும்) | | | | |

5. கவனமான பரிசீலனைக்குப்பின், மேலே பத்தி 4ல் குறிப்பிடப்பட்டுள்ள சுற்றுலா சாலை மேம்பாட்டுப் பணிகளை ரூ.992.57 இலட்சம் (ரூபாய் தொள்ளாயிரத்து தொண்ணூற்று இரண்டு இலட்சத்து ஐம்பத்து ஏழாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் நெடுஞ்சாலைத்துறை மூலம் மேற்கொள்ள பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு நிருவாக மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது:

(அ) ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினைப் பெற்று உரிய செயற்படுத்தும் முகமையிடம் வழங்க சுற்றுலா இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

(ஆ) ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள சாலை மேம்பாட்டு திட்டப் பணிகளின் தரத்தினை உறுதி செய்யவும் சுற்றுலாத் துறை நிதியின் மூலம் நிறைவேற்றப்பட்டது என்ற தகவல் பலகை அமைக்கவும் நெடுஞ்சாலைத்துறை தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) அறிவுறுத்தப்படுகிறார்.

(இ) மேற்கொள்ளப்பட உள்ள சாலைமேம்பாட்டுப் பணிகளை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பொறியியல் பிரிவின் மூலம் மேற்பார்வையிட்டு உறுதி செய்திட நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண் இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஈ) ஒப்பளிப்பு செய்யப்பட்ட பணிகள் குறித்த முன்னேற்ற அறிக்கை மற்றும் பயன்பாட்டுச் சான்றிதழ்களை பெற்று அரசுக்கு அனுப்பிவைக்கும்படி சுற்றுலா இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பணிகளுக்கான செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்:

"5054 சாலைகள் மற்றும் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு –80 பொது–800 ஏனைய செலவு – பதினோராவது ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் II – மாநிலத் திட்டம் – KC –முக்கிய சுற்றுலாத் தலங்களுக்கான அணுகுச்சாலைகளை மேம்படுத்துதல் – 16 பெரும் பணிகள்.
(கு.தொ.கு 5054 80 800 KC 1607)"

7. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.332/Secy(Exp)/2011, நாள்:01.12.2011–ல் பெறப்பட்ட ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

வி.கு. ஜெயக்கொடி
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
சுற்றுலா இயக்குநர், சென்னை –2.
தலைமைப் பொறியாளர், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, நெடுஞ்சாலைத் துறை, சென்னை– 5.
மேலாண் இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னை –2.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை –9.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை– 9.
(சுற்றுலா இயக்குநர் வழியாக).
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை –9/18.

<u>நகல்:</u>
மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை –9.
மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை– 9.
முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், நிதித்துறை, சென்னை– 9.
முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை, சென்னை –9.
செயலாளரின் தனிச்செயலாளர், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, சென்னை –9.
மாவட்ட ஆட்சித் தலைவர்,
தூத்துக்குடி/கோயம்புத்தூர்/ஈரோடு/தருமபுரி/ தஞ்சாவூர்/நாகப்பட்டினம்/
கடலூர்/காஞ்சிபுரம்/ விருதுநகர்/ சிவகங்கை.
நிதி(கல்வி–2)த் துறை, சென்னை –9.
நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, சென்னை –9.
சுற்றுலா மற்றும் பண்பாட்டு (சு1/சு2/பொது)த்துறை, சென்னை –9.
இருப்பு கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

01-12-2011.
பிரிவு அலுவலர்